සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව

சபரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்

**Sabaragamuwa Provincial Department of Education**

පළමු වාර පරීක්ෂණය - 2016 | 11 ශ්‍රේණිය
முதலாம் தவணைப் பரீட்சை 2016 | பகனபனகடி 11
**First Term Test - 2016** | **Grade 11**

***வணிகமும் கணக்கீட்டு கல்வியும் I***
***Business& Accounting studies I***

*පැය එකයි*
**ஒரு மணித்தியாலம்**
***One hour***

නම/විභාග අංකය :- ……………………………………………………………………………………

*සැලකිය යුතුයි :*

**(i)** **සියළුම ප්‍රශ්න වලට පිළිතුරු සපයන්න. මෙම පත්‍රය සඳහා ලකුණු 40 ක් හිමි වේ.**

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக**
**விடையளிப்பதற்கு புள்ளடித் தாள்களை பயன்படுத்துக**

01. தமது தேவை விருப்பங்களை நிறைவு செய்யும் பொருட்டு தாமே பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்யும் நடவடிக்கை
    1. ஆரம்ப உற்பத்தியாகும் 3. சிற்றளவு உற்பத்தியாகும்
    2. நேரில் உற்பத்தியாகும் 4. நேர் உற்பத்தியாகும்

02. ஒரு வணிகத்தினை ஆரம்பிப்பதற்கான ஏதுவான பிரதான காரணியாவது?
    1. தேவை, விருப்பங்கள் 3. கேள்வியும், நிரம்பலும்
    2. பொருட்களும், சேவைகளும் 4. உற்பத்தியும், விநியோகமும்

03. இலாப நோக்குடைய வணிக அமைப்பின் பிரதான இரு நோக்கங்களாவது
    1. இலாப உழைத்தலும் நுகர்வோர் திருப்தியை அதிகரித்தலும்
    2. பொருட்களின் தரத்தினை அதிகரித்தல் இலாப உழைத்தலும்
    3. நுகர்வோர் திருப்தியை அதிகரித்தலும் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தல்
    4. ஊழியர் நலனும் நாட்டின் தேசிய உற்பத்திக்கு பங்களிப்பு செய்தலும்

04. உற்பத்தி அடிப்படையில் வணிகத்தின் வகைகளாக அமைவது,
    1. முதலாம் இரண்டாம் நிலை உற்பத்தி
    2. உற்பத்தி சேவை வணிகம்
    3. இரண்டாம் நிலையும் சேவை வணிகமும்
    4. உற்பத்தி வணிகமும் இரண்டாம் நிலை வணிகமும்

05. வணிக இடர்களை எதிர்கொண்டு புத்தகக்கத்தில் ஈடுபடுபவர்
    1. ஊழியர் ஆவார் 3. முகாமையாளர் ஆவார்
    2. முயற்சியாளர் ஆவார் 4. முதலீட்டாளர் ஆவார்

06. வணிக சூழலின் ஒரு பிரிவான அகச் சூழல் காரணிகளை மட்டும் உள்ளடக்கிய தொகுதி
    1. உரிமையாளர், அரசியல் சூழல், சமூகம்
    2. சமூகம், ஊழியர், பொருளாதார கொள்கைகள்
    3. முகாமையாளர்கள், உரிமையாளர், தொழிநுட்ப மாற்றங்கள்
    4. உரிமையாளர், முகாமையாளர்கள், ஊழியர்

07. நுகர்வோரின் வாழ்க்கை நடத்தை பாங்கு மாற்றம்
    1. பலமாகும் 3. வாய்ப்பாகும்
    2. பலவீனமாகும் 4. அச்சுறுத்தலாகும்

08. பின்வருவனவற்றுள் சட்ட ஆளுமையுடைய வணிக அமைப்பாக கருதப்படுவது,
1. கூட்டினைக்கப்பட்ட கம்பனிகளும் அரச கூட்டுத்தாபனங்களும்
2. கூட்டினைக்கப்பட்ட கம்பனிகளும் பங்குடைமையும்
3. அரச கூட்டுத்தாபனங்களும் தனியுடைமையும்
4. பங்குடைமையும் தனியுடைமையும்

09. பின்வருவனவற்றுள் அரச திணைக்களங்களின் சிறந்த பண்பொன்று அல்லாதது,
1. அரச உடைமையும் கட்டுப்பாடும்
2. பதிவு செய்தல் கட்டாயம்
3. தொடாந்த இயங்கும் தன்மை
4. சட்ட ஆளுமை

10. வணிகத்தினை பதிவு செய்வதால் வணிகம் அடையும் அனுகூலம் அல்லாதது,
1. வணிகத்தின் உரிமையை பெற்றுக்கொள்ளல்
2. அரச மானியங்களை பெற்றுக்கொள்ள தகுதியடைதல்
3. கடன் வசதிகளை பெற்றக்கொள்ளல்
4. சட்ட ஆளுமையை பெற்றுக்கொள்ளல்

11. பாடசாலை புத்தக கடையிலிருந்து மாணவன் ஒருவன் தனது பயன்பாட்டிற்காக பயிற்சி கொப்பி ஒன்றை கொள்வனவு செய்கின்ற நடவடிக்கை
1. மொத்த வியாபாரமாகும்
2. சில்லறை வியாபாரமாகும்
3. இறக்குமதி வியாபாரமாகும்
4. ஏற்றுமதி வியாபாரமாகும்

12. மொத்த சில்லறை வியாபாரத்தினை வேறுபடுத்தும் பிரதான காரணியாக அமைவது
1. கொள்வனவாளர் நோக்கம்
2. கொள்வனவு தொகை
3. பொருளின் அலகு விலை
4. விற்பனை பின்னரான சேவை

13. இலங்கையர் வெளிநாட்டு பொருட்களை நுகர்வதற்கு ஏதுவாக அமையும் வியாபாரம்
1. ஏற்றுமதி வியாபாரம்
2. இறக்குமதி வியாபாரம்
3. மொத்த வியாபாரம்
4. சில்லறை வியாபாரம்

14. வணிகத்தின் வெற்றிக்கு வழிவகுக்கும் சேவை வணிகமாவது
1. துணைச் சேவைகள்
2. முதலாம் நிலைச்சேவைகள்
3. பொருட்களும் சேவைகளும்
4. நேர் சேவைகள்

15. ஏனைய வங்கிகளிடமிருந்து வர்த்தக வங்கிகளை வேறுபடுத்தும் பிரதான காரணியாக அமைவது,
1. சேமிப்பு கணக்குகள் பேணப்படுவது
2. நடைமுறை கணக்குகள் பேணப்படுவது
3. நிலையான சேமிப்பு கணக்குகள் பேணப்படுவது
4. முதலீட்டு கணக்குகள் பேணப்படுவது

16. காசோலை கொடுக்கல் வாங்கலில் தொடர்புபடாத தரப்பினர்
1. காசோலை வரைபவர்
2. காசோலைக்குரியவர்
3. பணம் பெறுபவர்
4. பணம் செலுத்துபவர்

17. காசோலை கொடுக்கல் வாங்கல் தொடர்பான விடயங்களை பதிவு செய்வதற்கான ஆவணமாவது
1. கடன் அட்டை
2. குறிப்பேடு
3. அடியிதழ்
4. வரவட்டை

18. இலங்கை வங்கியினால் வழங்கப்படும் கடன் அட்டை ஆவது,
1. பீபல் வீசா
2. சீ பேங் வீசா
*3. சீ ரெட்*
4. லெட் சுப்பர்

19. வரவட்டை கடனட்டைகளுக்கிடையிலான வேறுபாடாக அமைவது,
1. வரவட்டை பெற்றுக்கொள்ள வங்கிக் கணக்கு ஒன்று அவசியமாகும்
2. வரவட்டைகளுக்கு கழிவுகள் வழங்கப்படும்
3. தன்னியக்க ரெலர் இயந்திரத்தினூடாக பணத்தை பெறலாம்
4. தெரிவு செய்யப்பட்ட விற்பனை நிலையங்களில் பொருட்கள் சேவைகளின் கொள்வனவிற்காக பயன்படுத்தலாம்

20 காப்புறுதி ஒப்பந்தத்தில் பங்குகொள்ளும் முதலாம் பிரிவினர் ஆவோர்
1. காப்புறுத்துவோன்
2. காப்புறுதி பெறுவோன்
3. ஏனைய பிரிவினர்
4. மேற்கூறிய யாவரும்

21 ஊழியர் சார்பில் தொழில் வழங்குநர் ஒருவர் ஏற்படுத்தப்படும் ஆயுள் காப்புறுதி வகையாவது
1. தொழிலாளர் காப்புறுதி
2. ஆதன காப்புறுதி
3. கடன் காப்புறுதி
4. ஆயுள் காப்புறுதி

22 ஆதன காப்புறுதியிலும் மாத்திரம் உள்ளடங்கும் காப்புறுதி கோட்பாடுகளுள் ஒன்றாவது
1. காப்புறுத்தும் உரிமை
2. உயர் நம்பிக்கை
3. காப்பீடு
4. மேலதிக சலுகை

23 பின்வருவனவற்றுள் சரியான கூற்றாக அமைவது
1. இடர்களில் இருந்து பாதுகாப்பு பெறுவதற்கான காப்புறுதியே ஆதன காப்புறுதி ஆதம்.
2. உள்ளக தொடர்பாடல் முறையின் சிறந்த அம்சமாவது தொடர்பாடல் தூரம் மட்டுப்படுத்தப்பட்டிருப்பது
3. தொலைபேசி உரையாடல் ஒரு புறத் தொடர்பாடல் முறையாகும்
4. கடன் அட்டைகள் வணிக வங்கிகளால் மாத்திரமே வழங்கப்படுகின்றது

24 தொடர்பாடல் தன்மையான இலத்திரனியல் வாய்மொழி எழுத்து மூலமான தொடர்பாடலில் உள்ளடங்கும் ஊடகம்
1. தொலைபேசி உரையாடல்
2. மின்னஞ்சல்
3. தொலைநகல்
4. skype

25 பாரியளவு சந்தைப்பங்கினை வகிக்கும் தென்னாசிய நாடுகளில் ஒன்று
1. இலங்கை
2. இந்தியா
3. பாகிஸ்தான்
4. ஆப்கானிஸ்தான்

26 போக்குவரத்து ஒன்றின் கூறுகளாவன,
1. மார்க்கம், ஊடகம் , வலு, கிரயம்
2. ஊடகம் , வலு், தரிப்பிடம் கிரயம்
3. ஊடகம் , மார்க்கம் ,கிரயம் , தரிப்பிடம்
4. மார்க்கம் , ஊடகம் , வலு, தரிப்பிடம்

27 பின்வரும் வங்கிகளில் வணிக வங்கியல்லாதது,
1. இலங்கை வங்கி
2. மக்கள் வங்கி
3. சம்பத் வங்கி
4. தேசிய சேமிப்புவங்கி

28 இணையத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல் அமைவது
1. மின்னஞ்சல்
2. ஹஇலத்திரனியல் பணம்
3. இலத்திரனியல் வணிகம்
4. இலத்திரனியல் வர்த்தகம்

29 சிறந்த போக்குவரத்து முறையினை தெரிவு செய்கையில் கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள்
1. மார்க்கம், வலு ஊடகம் , தரிப்பிடம்
2. கிரயம் , பாதுகாப்பு, இயலளவு, விரைவு
3. காலம், வலு, சொகுசு, தரிப்பிடம்
4. கிரயம், சொகுசு, விரைவு, ஊடகம்

30 இலங்கையில் நாணயத்தை வெளியிட்ட அதிகாரம் பெற்ற நிறுவன அமைப்பு
1. இலங்கை மத்திய வங்கி
2. தேசிய சேமிப்பு வங்கி
3. நிதி அமைச்சு
4. மத்திய திரை சேரி

31 பியுமி தனது வணிகத்திற்காக ரூபா 200 000 கடனாக பெற்றார். இக்கொடுக்கல் வாங்கலினால் கணக்கீட்டு சமன்பாட்டில் ஏற்படும் தாக்கமாவது
1. சொத்துக்களும் மூலதனமும் அதிகரித்தல்
2. சொத்துக்களும் பொறுப்புக்களும் அதிகரித்தல்

3. சொத்துக்களும் பொறுப்புக்களும் குறைவடைதல்
4. சொத்துக்கள் அதிகரிக்க மூலதனம் குறைவடைந்தது

32 சொத்தொன்றின் பண்பல்லாதது,
1. கடந்தகால கொடுக்கல் வாங்கலின் பெறுபேறாகும்
2. வணிகத்தினால் கட்டுப்படுத்தக்கூடியது
3. எதிர்காலத்தில் வணிகத்திற்கு பொருளாதார நலன்களை உட்பாய்ச்சுதல்
4. நிகழ்காலக் கடப்பாடு

33 காசேட்டில் கொடுக்கல் வாங்கல்களை பதிவதற்கான மூல ஆவணமாவது
1. பற்றுச்சீட்டும் கொடுப்பனவு கைச்சாத்தும்
2. காசோலை அடியிதழும் கொடுப்பனவு கைச்சாத்தும்
3. கொள்வனவு பட்டியலும் கொடுப்பனவு கைச்சாத்தும்
4. நாட்குறிப்பும் காசோலை அடியிதழும்

34 கணக்காளர் பயன்பாட்டிற்காக ரவிந்து PLC நிறுவனத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட காகிதாதிகள் பதியப்படுவது,
1. கொள்வனவு நாளேட்டில்
2. விற்பனை நாளேட்டில்
3. பொது நாளேட்டில்
4. காசேட்டில்

35 வணிகமொன்றின் சொத்துக்கள் மூலதனம் பொறுப்புக்களின் பெறுமதி முறையே, ரூபா 150 000 ரூபா 100 000 ரூபா 50 000 ஆகும். அவ் வணிகத்திலனால் இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்ட பின்னரான கணக்கீட்டு சமன்பாடாக அமைவது,

| | சொத்துக்கள் = | மூலதனம் | + பொறுப்புக்கள் |
|---|---|---|---|
| 1. | ரூபா200 000 | ரூபா150 000 | ரூபா50 000 |
| 2. | ரூபா200 000 | ரூபா100 000 | ரூபா100 000 |
| 3. | ரூபா150 000 | ரூபா100 000 | ரூபா50 000 |
| 4. | ரூபா150 000 | ரூபா50 000 | ரூபா100 000 |

36 அமலவிடம் இருந்து பொருட்கள் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கலுக்கான இரட்டைப்பதிவாக அமைவது,
1. அமில க/கு வரவு பொருட்கள் க/கு செலவு
2. கொள்வனவு க/கு வரவு அமில க/கு செலவு
3. அமில க/கு வரவு கொள்வனவு க/கு செலவு
4. கொள்வனவு க/கு வரவு காசு க/கு செலவு

37 கொடுத்த கழிவாக ரூபா 4000 பெற்ற கழிவாக பதிவழிக்கப்பட்ட வழுவினை செம்மையாக்க தொங்கல் கணக்கில்,
1. ரூபா 4000 செலவு பக்கத்தில் பதிதல் வேண்டும்
2. ரூபா 4000 வரவு பக்கத்தில் பதிதல் வேண்டும்
3. ரூபா 8000 வரவு பக்கத்தில் பதிவழிக்கப்பட வேண்டும்
4. ரூபா 8000 செலவு பக்கத்தில் பதிவழிக்கப்பட வேண்டும்

38 வங்கி இணக்கக் கூற்றில் இடம்பெறும் விடயங்களுள் ஒன்று
1. வங்கி அறவீடுகள்
2. நேரடி வைப்புக்கள்
3. வசூலிக்கப்படாத காசோலைகள்
4. நிலையியற் கட்டளை கொடுப்பனவுகள்

39 ஒரு வணிகத்தின் சில்லறை காசாளர் ரூபா 650 யை கொடுப்பனவிற்காக செலவிட்ட பின்னர் மாத முடிவில் சில்லறை காசேட்டு மீதியாக ரூபா 350 காணப்பட்டது. மேலும் ரூபா 650 ஆல் சில்லறை காசேடு மீள் நிரப்பப்படின், சில்லறை காசு வசக்கட்டு பெறுமதியாவது,?
1. ரூபா 350 2. ரூபா 650 3. ரூபா 1000 4. ரூபா 1650

40 கொடுக்கல் வாங்கலின் மூல ஆவணமாகவும் பேரேட்டு கணக்காகும் காணப்படுவது
1. காசேடு
2. கொள்வனவு நாளேடு
3. விற்பனை நாளேடு
4. பொது நாட்குறிப்பேடு